## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

**அ.வ.எண்.** 12/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துளசி | மதம் | : |
| க/பெ | : முரளி | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

09.09.2024

<u>வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ன் படி பட்டா மாறுதலுக்கு மனு தாக்கல் செய்தோமா என்றால் செய்தேன். எனக்கு அதன்படி அளந்து பார்த்து பட்டா கொடுத்தார்களா என்றால் ஆமாம். நான் பட்டாவிற்கு மனு தாக்கல் செய்ததற்கான ஒப்புதல் ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு ஒப்புதல் ரசீதை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் நில அளவையர் அளந்து பார்க்கவில்லை என்றாலும் அவ்வாறு அளவீடு செய்து எனக்கு வழக்கு சொத்திற்கு பட்டா வழங்கப்படவேயில்லை என்றாலும் சரியல்ல.

2. நான் வருவாய்துறையை அணுகி தோராயமாக பட்டா வாங்கியுள்ளேன் என்றாலும் அளந்து பார்க்காமல் தோராயமாக பெற்ற பட்டா பொய்யானது என்றாலும் சரியல்ல. நான் வாங்கியுள்ள பட்டாவின்படியான இடத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் வந்து பார்ப்பதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு மனு செய்து அளந்து பார்த்து அப்போது தவறாக இருந்தால் பட்டா தவறு என்றால் சரிதான். நான் வாங்கியுள்ள வா.சா.ஆ 1 பொய்யாக போலியாக தயார் செய்யப்பட்ட பத்திரம் என்றால்

பொய்யான பத்திரம் இல்லை. பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டி இந்த பொய்யான ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள பத்திரத்திற்கும் அதன்மூலம் பெற்ற பட்டாவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ 2 ஆகிய ஆவணங்களை வைத்து வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து இன்றுவரை பிரதிவாதி அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)